# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2016 மே மாதம் 03 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

# நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ பீ.டி. அபேரத்ன உறுப்பினரினால் கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2016.04.05 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி: (Îæ/vi (1)16/28)**

அ. ஹொரணை திக்கேனபுர வீதி, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் காப்பட் இடப்பட்டுள்ளதா ?

ஆ. இதற்காக செலவு செய்யப்பட்டுள்ள நிதி எவ்வளவு ?

இ. பூர்த்தி செய்யப்பட்டுள்ள அளவின் நீளம் மற்றும் அகலம் எவ்வளவு ?

ஈ. இவ் வீதியில் கல் பதிப்பதற்கு செலவு செய்யப்பட்ட நிதி எவ்வளவு ?

உ. இச் செயற்றிட்டத்தினை மேற்கொண்ட ஒப்பந்தக்காரர் அல்லது ஒப்பந்த நிறுவனம் எது?

ஊ. உரிய நிதியிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நிர்மாணம் தொடர்பாக நீங்கள் திருப்திப்படுகின்றீர்களா ?

எ. திருப்திப்படவில்லையாயின் இது தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

**02.** **கௌரவ பீ.டி. அபேரத்ன உறுப்பினரினால் கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2016.04.05 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (Îæ/vi (1)16/29)**

அ. 2012 ஆம் ஆண்டில் ரூபா 164,232,954/- ஐ செலவு செய்து மேல் மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தனிப்பட்ட தாபனம் ஒன்றின் ஊடாக கவர் இடும் இயந்திரங்கள் 02 மற்றும் கலவை கலக்கும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா ?

ஆ. கொள்வனவு செய்யப்பட்டிருந்தால் அந் நிதி செலவு செய்யப்பட்டுள்ள முறை யாது ?

இ. 2012 நவம்பர் 23 ஆந் திகதி உரிய இயந்திரம் அதிகார சபைக்கு கையேற்கப்பட்டு உள்ளதா ?

ஈ. அவ் இயந்திரம் இது வரை உபயோகத்திற்கு எடுக்கப்படவில்லையா ?

உ. அவ் இயந்திரத்திற்கு உரிய வருடாந்த காப்புறுதித் தவணைக் கட்டண நிதி எவ்வளவு ?

ஊ. உபயோகத்திற்கு எடுக்கப்படாத இயந்திரம் காப்புறுதி செய்யப்பட்டதினால் அதிகார சபைக்கு நட்டம் ஏற்படுகின்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

எ. இதுவரை இவ் இயந்திரத்தை காப்புறுதி செய்ததால் அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு ?

ஏ. மேற்குறிப்பிட்ட படி உரிய நிதி அழிவுக்கு உட்படுமாறு செய்த முதலீடு தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

**03.** **கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் 2016.04.05 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)16/30)**

அ. 2000 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கையின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை எத்தனை ?

ஆ. இவற்றில் கலந்துரையாடலுக்கு (விவாதத்திற்கு) உட்படுத்தப்பட்டவற்றின் எண்ணிக்கை எத்தனை ?

இ. அகற்றிக் கொள்ளப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை எத்தனை ?

ஈ. ஏகமனதாக நிறைவேற்றப்பட்டவற்றின் எண்ணிக்கை எத்தனை ?

உ. மேலதிக வாக்குகலால் நிறைவேற்றப்பட்டவற்றின் எண்ணிக்கை எத்தனை ?

ஊ. தோல்வியடைந்த பிரேரணைகளின் எண்ணிக்கை எத்தனை ?

எ. அப் பிரேரணைகளுள் கல்வி, சுகாதாரம், கூட்டுறவு சட்டம் மற்றும் நியதிச் சட்டம் போக்குவரத்து ஆக ஒவ்வொரு விடயத்திற்கும் உரியதான பிரேரணைகள் எத்தனை ?

ஏ. அந்த நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளுள் இவ் வேலையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரேரணைகள் யாவை ? எந்த வருடம் தொடக்கம் ? எவ் அமைச்சின் கீழ் ?

ஐ. வருடாந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது இந்த நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் தொடர்பாக கவனத்தைச் செலுத்தி ஆராய்ந்து பார்க்கப்பட்டதா ? எந்த வருடத்தில் ?

ஒ. நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளை எவரது இயலாமையினால் நடைமுறைப் படுத்தப்பட வில்லை ? இதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் யார் ?

ஓ. இது வரை நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளை மீண்டும் ஆராய்ந்து பார்த்து எதிர்கால நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இச் சபையின் மூலம் குழு ஒன்றினை நியமிப்பது சிறந்தது என்பதை நினைக்கின்றீர்களா ? அப்படியாயின் அதற்காக எடுக்கும் நடவடிக்கை யாது ?

**04.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் விவசாய, காணி, நீர்ப்பாசனம் விலங்குற்பத்தி சுகாதாரம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் 2016.04.05 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)16/31)**

அ. மேல் மாகாண சபையின் கீழ் மாகாணத்தில் உள்ள காணிகள் நீண்ட காலம் அல்லது குறுங் காலத்தின் கீழ் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன ?

ஆ.
- i. காணியின் பெயர் மற்றும் அளவு ?
- ii. காணி அமைந்துள்ள இடம் ?
- iii. குத்தகையின் அடிப்படை ?
- iv. குத்தகைக் காரரின் பெயர் ?
- v. தாபனம் ஒன்று பேணப்பட்டால் தாபனத்தின் பெயர் ?
- vi. குத்தகைக்கு வழங்கிய திகதி ?
- vii. குத்தகைக் காலம் நிறைவடையும் திகதி ?
- viii. 2016.03.15 ஆந் திகதியில் நிலுவைக் குத்தகையின் அளவினை அறிக்கை ஒன்றாகப் பெற்றுக் கொடுப்பீர்களா ?

இ. மேலே (ஆ) தகவல்களுக்கு இணங்க குத்தகைக்கு வழங்கிய பின்னர் உரிய முறையில் குத்தகையினை செலுத்தாததினால் சிக்கல் ஏற்பட்டுள்ள குத்தகைக் காரர்களின் மற்றும் அத் தாபனத்தின் பெயர்களைக் குறிப்பிட முடியுமா ?

ஈ. மாகாண சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவைக் குத்தகையின் அளவின் மொத்தம் எவ்வளவு ?

உ. குத்தகை செலுத்தப்படாததன் காரணமாக ஏற்பட்டுள்ள இப் பிரச்சினை தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

**05.** **கௌரவ ரஜித ரங்கன ஹபுஆரச்சிகே உறுப்பினரினால் விவசாய, காணி, நீர்ப்பாசனம் விலங்குற்பத்தி சுகாதாரம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)16/32)**

அ.
- i. கட்டான பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படும் விவசாய காணியின் அளவு எவ்வளவு ?
- ii. அதில் எவ்வளவு அளவு தற்போது செய்கை பண்ணப்படுகின்றது ?

ஆ. i. சென்ற 15 வருடத்தினுள் விவசாய அமைச்சின் மூலம் எவ்வளவு நிதி கட்டான பிரதேச செயலாளர் பிரிவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது ?

ii. அவ்வாறு நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு இருந்தால் அச் செயற்றிட்டங்கள் எவை ?

இ. i. ஆடிஅம்பலம் வல்பொல வயலை அபிவிருத்தி செய்வதற்காக அந்த விவசாயச் சங்கத்தின் மூலம் உங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதா ?

ii. இது தொடர்பாக நீங்கள் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

iii. அந்த வேண்டுகோளை நிறைவேற்றி ஆடியம்பலம் வல்பொல வயலினை அபிவிருத்தி செய்ய நீங்கள் ஏற்பாட்டினை ஒதுக்குவீர்களா ?

**06.** **கௌரவ ரஜித ரங்கன ஹபுஆரச்சிகே உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)16/33)**

அ. உங்கள் அமைச்சின் கீழ் காணப்படும் இளைஞர் விவகார நடவடிக்கை என்பதை உங்கள் அமைச்சு எவ்வாறு வரைவிலக்கணம் செய்கின்றது ?

ஆ. எந்த வயதிற்கு உட்பட்டவர்களை உங்கள் அமைச்சு இளைஞர்கள் என இனங்கான்கின்றது ?

இ. இளைஞர் விவகாரம் என்பதில் உங்கள் அமைச்சுக்கு உரிய பொறுப்புக்களும் கடமைகளும் எவை ?

ஈ. அந்த ஒவ்வொரு பொறுப்புக்களையும் கடமைகளையும் பூர்த்தி செய்வதற்காக சென்ற வருடத்தினுள் நடைமுறைப் படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் என்ன ?

உ. அச் செயற்றிட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் அளவு எவ்வளவு ?

ஊ. இளைஞர் நடவடிக்கையை மேற்கொள்வதற்காக மேல் மாகாண சபையினுள் எவ்வளவு அலுவலர்கள் காணப்படுகின்றனர் ?

எ. அவ்வாறான உத்தியோகத்தர்கள் இல்லாதவிடத்து இளைஞர் நடவடிக்கையை மேற்கொள்வதற்காக உங்கள் அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**07.** **கௌரவ பி.டி. அபேரத்ன உறுப்பினரினால் விவசாய, காணி, நீர்ப்பாசனம் விலங்குற்பத்தி சுகாதாரம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)16/34)**

அ. வலல்லாவிட பிரதேச செயலாளர் பிரிவின் இத்தபான கமநல சேவைக் காரியாலயத்தின் மூலம் இத்தபான சேற்று பயிரிடப்படாத நிலத்தில் விவசாயம் செய்ய நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதா ?

ஆ. வழங்கப்பட்டிருந்தால் ஒரு ஏக்கருக்கு வழங்கப்பட்ட நிதி எவ்வளவு ? எத்தனைபேருக்கு ?

இ. வழங்கிய நிதியை வெவ்வேறாக குறிப்பிடுவீர்களா ?

ஈ. உதவி வழங்கப்பட்ட எல்லோரும் தற்போது காணியில் இருந்து பலாபலனைப் பெற்று உள்ளனரா ?

உ. காணியைச் சுத்தப்படுத்தாத எத்தனை பேருக்கு நிதி வழங்கப்பட்டு உள்ளது ?

ஊ. இச் செயற்திட்டம் பலாபலன் மிக்கது என நீங்கள் திருப்திப் படுகின்றீர்களா ?

எ. அவ்வாறு இல்லாத விடத்து நீங்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன ?

**08.** **கௌரவ எம். ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் விவசாய, காணி, நீர்ப்பாசனம் விலங்குற்பத்தி சுகாதாரம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Îæ/vi (1)16/35)**

அ. i. கட்டான பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ள சிறிய ஆறுகளின் அபிவிருத்திக்காக 1000 ஆறுகளை செப்பனிடும் சென்ற அரசின் செயற்திட்டத்தின் கீழ் செலவு செய்யப்பட்ட நிதி எவ்வளவு ?

ii. அது எந்த வருடத்தில்?

ஆ. ஆறுகளின் மறுசீரமைப்பின் போது ஆற்று அணைக்கட்டுக்கள் உரிய தரத்திற்கு மாறாக கட்டப்பட்டதனால் அருகில் உள்ள கிராமங்கள் எல்லாம் மழைக் காலங்களில் நீரில் மூழ்கின்றன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. i. இந்த ஆறு மறுசீரமைப்பின் பின் பயிர்ச்செய்கை நிலங்களுக்கு நீர் வழங்கப்பட்டதா ?

ii. அவ்வாறு பயிர்ச்செய்கைக்காக ஆற்று நீர் பயன்படுத்தப்பட்டால் பயிரிடப்பட்ட நிலத்தின் அளவு எத்தனை ஹெக்டயார்கள் ஆகும் ?

ஈ. i. எட்டு வருடத்தை விட அதிக காலம் இந்த ஆற்று அணைக்கட்டை திறக்க முடியாது அவ் அணைக்கட்டின் திறப்பு காணாமல் போய் உள்ளது என்பதனை அறிவீர்களா ?

ii. இதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் யார் ?

உ. ஆறு மறுசீரமைப்பின் போது அகற்றப்பட்ட மணலுக்கு என்ன நிகழ்ந்தது ?

**09.** **கௌரவ எம். ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல், சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(Îæ/vi (1)16/36)**

அ. நீங்கள் அமைச்சுப் பதவியினை பொறுப்பேற்ற தினம் தொடக்கம் உங்கள் அமைச்சின் கீழ் காணப்படும் தாபனங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள தவிசாளர்களின் பெயர்கள் (தாபனங்களுக்காக வெவ்வோறாக) என்ன ?

ஆ. அவர்களின் கல்வித் தகைமைகள் (தாபனங்களுக்காக வெவ்வோறாக) என்ன ?

இ. நீங்கள் அமைச்சுப் பதவியினை பெற்றுக் கொண்ட தினத்தில் இருந்து உங்கள் அமைச்சின் கீழ் காணப்படும் தாபனங்களில் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்த்துக் கொண்ட நபர்கள் (தாபனங்களுக்காக வெவ்வோறாக) எவ்வளவு ?

ஈ. அது எப்பதவிகளுக்கு என (தாபனங்களுக்காக வெவ்வோறாக) காட்டுங்கள் ?

உ. உங்கள் அமைச்சின் கீழ் காணப்படும் தாபனங்களில் இதுவரை ஆட்சேர்க்கப்படாது காணப்படும் வெற்றிடங்கள் (தாபனங்களுக்காக வெவ்வோறாக) எவ்வளவு ?

ஊ. மேற்கூறப்பட்ட உங்களின் கீழ் காணப்படும் தாபனங்களுக்காக பயிற்சியற்ற அல்லது தொண்டர்களாக ஆட்சேர்க்கப்பட்ட நபர்கள் (தாபனங்களுக்காக வெவ்வோறாக) எவ்வளவு ?

**10.** **கௌரவ எம். ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(Îæ/vi (1)16/37)**

அ. நீங்கள் அமைச்சுப் பதவியினை பொறுப்பேற்ற தினம் தொடக்கம் உங்கள் அமைச்சின் கீழ் காணப்படும் தாபனங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள தவிசாளர்களின் பெயர்கள் (தாபனங்களுக்காக வெவ்வோறாக) என்ன ?

ஆ. அவர்களின் கல்வித் தகைமைகள் (தாபனங்களுக்காக வெவ்வோறாக) என்ன ?

இ. நீங்கள் அமைச்சுப் பதவியினை பெற்றுக் கொண்ட தினத்தில் இருந்து உங்கள் அமைச்சின் கீழ் காணப்படும் தாபனங்களில் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்த்துக் கொண்ட நபர்கள் (தாபனங்களுக்காக வெவ்வோறாக) எவ்வளவு ?

ஈ. அது எப்பதவிகளுக்கு என (தாபனங்களுக்காக வெவ்வோறாக) காட்டுங்கள் ?

உ. உங்கள் அமைச்சின் கீழ் காணப்படும் தாபனங்களில் இதுவரை ஆட்சேர்க்கப்படாது காணப்படும் வெற்றிடங்கள் (தாபனங்களுக்காக வெவ்வோறாக) எவ்வளவு ?

ஊ. மேற்கூறப்பட்ட உங்களின் கீழ் காணப்படும் தாபனங்களுக்காக பயிற்சியற்ற அல்லது தொண்டர்களாக ஆட்சேர்க்கப்பட்ட நபர்கள் (தாபனங்களுக்காக வெவ்வோறாக) எவ்வளவு ?

**VI.** **வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை**

**VII.** **அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்**

**VIII.** **தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்**

**IX.** **பொது நடவடிக்கை**

**01.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா) இனால் சமர்ப்பிக்கப்படுவதற்கு (மே.மா)**

"மேல் மாகாணத்தின் 2015 இன் ..... ஆம் இலக்க நிதி (திருத்த) நியதிச் சட்டம்"

*இரண்டாம் முறை வாசித்தல்*

நியதிச் சட்ட நகல் பிரதி 2015.07.21 ஆந் திகதி முதலாம் முறை வாசிக்கப்பட்டது

2015.12.10 ஆந் திகதி நடைபெற்ற சட்ட நியதிச் சட்ட செயற்குழுவின் அறிக்கை மற்றும் 2016.03.24 ஆந் திகதி நடைபெற்ற சட்ட நியதிச் சட்ட செயற்குழுக் கூட்ட அறிக்கைகளுடன் தொடர்புடையது.

**02.** **கௌரவ இசுர தேவப்பிரிய முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**மேல் மாகாண மாகாண சபையின் 2015 இன் 01 ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிப்பவர்களின் நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட விதிகள்**

"மேல் மாகாண மாகாண சபையின் 2015 இன் 01 ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிப்பவர்களின் நியதிச் சட்டத்தின் 52 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சருக்காக ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டு

1937/20 ஆம் இலக்க 2015 ஒக்டோபர் மாதம் 22 ஆந் திகதி வியாழக் கிழமை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் [(iv(அ)பகுதி) - மாகாண சபைகள்)] மூலம் வெளியிடப்பட்டுள்ள,

"மேல் மாகாணத்தின் 2015 இன் 01 ஆம் இலக்க பொருட்களை அடகு பிடிப்பவர்களின் விதிகள் என்ற பெயர் கொண்ட விதிகள்.

குறித்த நியதிச் சட்டத்தின் 53 (4) உப பிரிவிற்கு இணங்க அங்கீகாரத்திற்காக இந்த மாகாண சபைக்கு 2015.12.22 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பின் அன்றைய தினம் எடுக்கப்பட்ட முடிவிற்கு இணங்க 2016.03.24 ஆந் திகதி நடைபெற்ற சட்ட நியதிச் சட்ட செயற்குழுவில் அது தொடர்பாக தொடர்ந்தும் கலந்துரையாடி அச் செயற்குழுவின் சிபாரிசு உள்ளடக்கப்பட்ட அறிக்கை 2016.04.05 ஆந் திகதி மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட படியால் அவ் விதிகள் தொடர்பாக கிடைக்கப் பெற்ற அச் செயற்குழுவின் சிபாரிசுகள் தொடர்பாக கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

**03.** **கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை :**

**2014 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தின் 07 ஆவது பிரிவிற்கு இணங்க மாகாண சபை முற்பணக் கணக்குகளின் எல்லையை திருத்துதல் - 2015 ஆம் ஆண்டு**

"முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்துதல் 2015 என்ற பெயர் கொண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள படி முற்பணக் கணக்குகளின் எல்லைகளைத் திருத்தும் போது 2014 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தின் 07 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட்டுள்ள படியாலும்

அத் திருத்தங்களை மேற்கொள்வதற்காக மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் சபையின் அங்கீகாரத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள படியாலும்,

அவ் அட்டவணையில் காட்டப்பட்டதற்கு இணங்க ஒவ்வொரு முற்பணக் கணக்குகளின் எல்லைகளை திருத்துவதனை இம் மேல் மாகாண மாகாண சபை அங்கீகரிக்கின்றது.

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

### 01. கௌரவ லலித் எல்லாவல அவர்கள்

மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களினது புதிய அரசின் மூலமும், சென்ற அரசினால் மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படும் ஊழல் மோசடி ஆட்கொலை, அரச சொத்துக்களின் முறைகேடான பாவனை தொடர்பாக இவ் வேளையில் குழு ஒன்றினை நியமித்து தவறிழைத்தவர்களை சட்டத்தின் முன் கொண்டுவந்து தண்டனை வழங்குவதற்கு திட்டமிடுவது மகிழ்ச்சிக்கு உரிய விடயம் ஒன்றாகும்.

1989 மற்றும் 1990 கால எல்லையினுள் இந் நாட்டில் மிகப் பாரிய அளவாக அரச சொத்துக்களை அழித்து ஒழித்த, மனித உயிர்களை அழித்த காலம் அண்மைக்கால இலங்கை வரலாற்றில் இடம்பெறவில்லை எனவே இது தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு குழு ஒன்றினை நியமித்து அவ் அரசாங்கச் சொத்துக்களை அழித்து மனித உயிர்களைக் கொன்ற நபர்களுக்கு சட்டத்தின் மூலம் தண்டனை வழங்கவும் மற்றும் அழித்து ஒழிக்கப்பட்ட அரசாங்க சொத்துக்களின் பெறுமதியை உரிய தவறிழைத்தவர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் மேன்மை தங்கிய ஜனாதிபதியிடம் இம்மேல் மாகாண மாகாண சபை கேட்டுக் கொள்கின்றது. **(பி/vi (1)15/02)**

### 02. கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ அவர்கள்

பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை ஆட்சேர்த்துக்கொள்வதில் பாரிய சிக்கல் மிக்க நிலைமை ஒன்றாக ஏற்பட்டுள்ளது.

முதலாம் தரத்திற்கும் மற்றும் ஆறாம் தரத்திற்கும் பிள்ளைகளை ஆட்சேர்ப்பதற்காக ஏனைய தரங்களில் பிள்ளைகளை ஆட்சேர்க்கும் முறைக்கு இணைந்த வகையில் மிகவும் ஒழுங்கான வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அந்த ஏனைய தரங்களுக்காக பிள்ளைகளை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு அவ்வாறான ஒழுங்காக வேலைத் திட்டம் ஒன்றில்லை எனவே பிள்ளைகளை ஆட்சேர்த்துக்கொள்ளும் போது பல்வேறுபட்ட கையூன்றல்களைப் பெறுதல் ஊழல் மோசடி பல்வேறுபட்ட முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்பதனை கேள்விப்படக் கூடியதாக இருக்கின்றது.

எனவே முதலாம் தரத்திற்கு மற்றும் ஆறாம் தரத்திற்கும் பிள்ளைகளை ஆட்சேர்த்துக்கொள்ளும் போது தற்போது நடைமுறையில் உள்ளதும், அதேபோல் ஏனைய தரங்களுக்கு பிள்ளைகளை ஆட்சேர்ப்பதற்காக மிகவும் சிறந்த ஒழுங்கான வேலைத் திட்டம் ஒன்றினைத் தயாரித்து மேல் மாகாண சபையின் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு உரிய எல்லா பகுதியினரிடமும் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது. **(பி/vi (1)15/04)**

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2016.04.20ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.